பட்டினமும் சூழலும் பிரதேச சபை

திருகோணமலை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 ஏப்ரல் 01 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை மற்றும் முகாமைதடதுவ அறிக்கை முறையே 2019 மே 22 ஆம், 2019 மே 31 ஆம் திகதிகளில் சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் பட்டினமும் சூழலும் பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| i) சபையின் நான்கு வங்கிக் கணக்குகள் தொடர்பாக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காசேட்டின் படியான வங்கி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 26,132,554 ஆகக் காணப்பட்ட போதிலும் நிதிக்கூற்றுக்களில் அத்திகதியில் உள்ளவாறான வங்கி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 26,988,085 தொகையாக காட்டப்பட்டதனால் வங்கி மீதி ரூபா 855,531 தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. இத்தொகையினை அடையாளம் கண்டு சீர் செய்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வேறுபாட்டிற்கான காரணங்கள் கண்டறியப்பட்ட கணக்குகளின் மீதி எதிர்வரும் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் திருத்தம் செய்வதுடன் தொடர்ச்சியாக வேறுபட்டுக் காணப்படும் இரண்டு வங்கிக் கணக்குகள் தொடர்பாக மேலதிக கவணம் செலுத்தப்படல் வேண்டும். | எமது சபையின் பொது மற்றும் நன்கொடைக்கணக்குகளின் பரீட்சை மீதியில் காணப்படும் மீதிக்கும் உண்மையில் காசேட்டின் படி மீதிக்கும் கடந்த 10 வருட காலமாகவே சம அளவான வேறுபாடு காணப்படுகின்றது வங்கி மீதி அதிகரித்து காணப்படுவதற்கு காரணம் கடந்த காலங்களில் நிதி ஆண்டில் ஏற்பட்ட தவறை திருத்தாமையே ஆகும். |

| | | | |
|---|---|---|---|
| ii) | ஊழியர் கடன் பதிவேட்டின் படி ஊழியர் கடன் மீதி ரூபா 15,719,724 ஆகக் காணப்பட்ட போதிலும் நிதிக்கூற்றுக்களில் ஊழியர் கடன் மீதி ரூபா 17,634,837 ஆகக் காணப்பட்டது. இதனால் ஊழியர் கடன் மீதி ரூபா 1,915,113 தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | இவ்விடயம் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுவதுடன் இது தொடர்பாக எமக்கு தெரியப்படுத்தவும். | பணியாளர் கடன் மீதியானது ஆரம்ப காலங்களில் கடன் பதிவேட்டில் ஏற்பட்ட வழுவினால் தொடர்ந்தும் இம் மீதியானது வேறுபட்டு காணப்படுகின்றது இருப்பினும் ஏற்கனவே கோரப்பட்ட கணக்காய்வு ஐயவினாக்களின் பிரகாரமும், கணக்காய்வு முகாமைத்துவ குழுவினால் அறிவுறுத்தப்பட்டதற்கமைவாகவும் எம்மால் சில குறைபாடுகள் சீர் செய்யப்பட்டுள்ளதுடன் ஏனைய வழுக்கள் சீர் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. |
| iii) | மீளாய்வாண்டில் வருமானச் செலவாகக் காட்டப்பட வேண்டிய பல்வேறு செலவுகள் மூலதனச் செலவினமாக வகைப்படுத்தப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்தன. | பிழையாக வகைப்படுத்தப்பட்ட விடயத்தினை சீர்செய்ய நடவடிக்கை எடுப்பதுடன் எதிர்வரும் காலங்களில் சரியான வகையில் வகைப்படுத்தல் வேண்டும். | மீளாய்வாண்டில் வருமானச் செலவீனமாக காட்டப்பட வேண்டிய பல்வேறு செலவீனம் தவறுதலாக மூலதனச் செலவீனமாக காட்டப்படது திருத்தப்பட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. |
| iv) | நானாவித வைப்புப் பதிவேட்டின் படி மீதி ரூபா 19,911,832 ஆகக் காணப்பட்ட போதிலும் நிதிக்கூற்றுக்களில் மீதியாக ரூபா 20,026,009 ஆகக் காணப்பட்டது. இதனால் நானாவித வைப்பு மீதி ரூபா 114,177 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | தங்களால் கண்டறியப்பட்ட வேறுபாடு எதிர்வரும் ஆண்டறிக்கையில் சீர் செய்யப்படல் வேண்டும். | கடந்த ஆண்டுகளில் உள்ள நானாவீத வைப்பு மீதிகளில் ஏற்பட்ட தவறினால் ரூபா 15இ097.84 ஆல் கூடுதலாக காணப்படுகின்றது. மேலும் நானாவீத வைப்பு மீதிகளில் ரூபா 99இ078.70 தற்போது சீர் செய்யப்பட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. |

1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை.

| கணக்கு விடயம் | பெறுமதி ரூபா. | சமர்ப்பிக்கப்படாத சான்று | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| வீதவரி | 12,454,562 | காலப்பகுப்பாய்வு | காலப்பகுப்பாய்வினை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கலப் பகுப்பாய்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது விரைவில் சமர்ப்பிக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன். |

1.4 இணங்காமைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி பிரமாணம் பிரிவு 571 | 03 தொடக்கம் 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா12,498,998 தொகையான கேள்வி, நானாவித மற்றும் ஒப்பந்த வைப்புக்கள் நிதிப் பிரமாணத்தின் படி கொடுத்து தீர்ப்பதற்கு அல்லது வருமானத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமானத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | 2012ம் ஆண்டிற்கு முந்திய நானாவித மற்றும் கேள்வி வைப்புக்கள் 10.07.2018 ஆந் திகதி நடைபெற்ற மாதாந்த சபைக் கூட்டத்தில் தீர்மான இலக்கம் 6(உ)10.07.2018 ற்கமைவாகரூபா. 16.07.2018 XE-40715 பற்றுச்சீட்டு இலக்கத்தின் கீழ் ரூபா 1,630,566.29 வருமான கணக்கிற்கு மாற்றப்பட்டது. ஏனைய வைப்புக்களும் மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. |
| ஆ) 1988ம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதியின் அத்தியாயம் X பிரிவு 193 | ஆண்டுக்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவு திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் தயாரித்து கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | இக் கூற்று தயாரித்து விரைவில் சமர்ப்பிப்பதற்கு உரிய உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். |

2. நிதி மீளாய்வு

2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 47,913,097 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 22,272,975 ஆக இருந்தது.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான விடயம் | பாதீடு | ஆண்டுக்கான வருமானம் | பெறப்பட்ட வருமானம் | 2018.12.31 இல் நிலுவை | பாதீடு | ஆண்டுக்கான வருமானம் | பெறப்பட்ட வருமானம் | 2017.12.31 இல் நிலுவை |
| | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" |
| வீதவரிகள் | 26,420 | 24,855 | 23,341 | 821 | 26,404 | 22,479 | 26,058 | 12,454 |
| அனுமதி பத்திர கட்டணம் | 4,523 | 2,153 | 2,361 | 208 | 4,028 | 6,351 | 2,271 | 99 |

கடந்த ஆண்டில் ஆண்டுக்கான அனுமதிப் பத்திரக் கட்டண வருமானமாக ரூபா 6,351,000 இருந்த போதிலும் மீளாய்வாண்டில் ரூபா ரூபா 2,153,000 ஆக காட்டப்பட்டுள்ளது. மேலும் மீளாய்வாண்டில் அறவிட வேண்டிய அனுமதிப் பத்திர கட்டணம் கடந்த வருடத்தை விட ரூபா 109,000 தொகையால் ஆல் அதிகரித்துள்ளது. இது அனுமதிப் பத்திரக் கட்டண அறவீட்டில் மந்த நிலைமையைக் காட்டுகின்றது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றுகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(அ)நிறை குறைந்த பிள்ளைகளின் பிறப்பு விகிதம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் பிறந்த பிள்ளைகளில் நிறை குறைந்து பிறந்த பிள்ளைகளின் விகிதமானது 2015, 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் முறையே 9.47%, 12.1%, 14.7% மற்றும் 11.3% ஆக காணப்பட்டிருந்தும் 2015 ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை வரவு செலவுத் திட்டத்தில் தாய் சேய் நலன் மற்றும் சிறுவர் பராமரிப்பிற்கென எந்தவொரு செலவீன ஒதுக்கீடும் | தாய் சேய் நலன் மற்றும் சிறுவர் பராமரிப்புக்கென வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்படல் வேண்டும். | கடந்த பத்து வருடங்களாக எமது நலன்புரிச் சேவைக்கான நிகழ்ச்சித்திட்டத்தில் நிறைகுறைந்த பிள்ளைகளின் பிறப்பு வீத செயற்பாட்டிற்கான ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்கின்றோம். ஆனால் தற்பொழுது 2019ம் ஆண்டில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துடன் இணைந்து சிறுவர் பராமரிப்பில் நிறைகுறைந்த பிள்ளைகளின் பிறப்பு வீதத்தினை குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதோடு |

| | |
|---|---|
| ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக சபையானது தாய் சேய் நலன்களில் அக்கறை கொண்டிருக்கவில்லை. | 2020ம் ஆண்டில் இருந்து எமது வரவு செலவுத்திட்டத்தில் இதற்கான ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை அறியத்தருகின்றேன். |

(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

---

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி இலக்குச் சட்டத்தின் பிரகாரம் அதன் நோக்கம் மற்றும் இலக்கு என்பவற்றை சபையினால் அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை. மேலும் 2030 ஆம் ஆண்டில் அடையப்பட வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தொடர்பாக பொருத்தமான அறிவினை கொண்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான நிகழ்ச்சி நிரல் தயாரித்து அதனை அமுல்படுத்தப்படல் வேண்டும். | உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோரினால் உள்ளூராட்சிமன்ற தலைவர்கள் செயலாளர்கள், உத்தியோகத்தர்களுக்கு இது தொடர்பான பயிற்சிப்பட்டறை ஒன்று 2018.09.18 அன்று நடாத்தப்பட்டுள்ளது. என்பதை தங்களுக்கு அறியத்தருகின்றேன். இவ் அறிவுறுத்தலுக்கமைவாக செயற்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நிலைபேறான அபிவிருத்தி இலக்கு சம்பந்தமான பயிற்சி மூலம் சபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்களுக்கு அறிவு வழங்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன். |

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

---

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அ) 2018 ஆம் ஆண்டின் இருப்புக் கணக்கெடுப்பின் போது சபையினால் பராமரிக்கப்படும் சாம்பல்தீவு மற்றும் உப்புவெளி நூலகங்களில் முறையே 1902 மற்றும் 636 புத்தகங்கள் தொலைந்து போணமை சுட்டிக்காட்டப்பட்ட போதிலும் அவை தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தங்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கையினை எமக்கு அறியத் தருதல் வேண்டும். | எமது சபையில் உள்ள நான்கு நூலகங்களுக்கும் நூலகருக்கான ஆளணி 04 ஆகும் ஆனால் இரண்டு நூலகர்கள் மட்டுமே கடமையாற்றுகின்றனர். உப்புவெளி மற்றும் சாம்பல்தீவு பொது நூலகத்தில் 2538 புத்தகங்கள் தொலைந்தமை தொடர்பாக இவ் இரு நூலகர்களை கொண்டு தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என்பதை அறியத்தருகின்றேன். |

3.3 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையில் பாரவூர்தி இயந்திரங்கள் இருந்தும், இவற்றை இயக்குவதற்கு தேவையான ஆளணிகள் தேவைப்பட்டிருந்தும், இவ் ஆளணியை நிரப்புவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆளணியை நிரப்புவதற்கு மேலதிக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இயந்திரங்கள் இயங்குவதற்கு தேவையான ஆளணியினை நிரப்புமாறு கேட்டு கடிதங்கள் அனுப்பப்பட்டதுடன் தற்போது பதிலீட்டு பாரவூர்தி சாரதியினை கொண்டு பாரவூர்தி இயந்திரங்கள் இயங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (ஆ) | முகாமைத்துவ உதவியாளர் வெற்றிடம் மீளாய்வாண்டில் 02 ஆகக் காணப்பட்ட போதிலும் இவற்றை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆளணியை நிரப்புவதற்கான மேலதிக நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | முகாமைத்துவ உதவியாளருக்கான வெற்றிடம் நிரப்புவதற்கு எமது TG/PS/EST/New Cadre/2017, 30.05.2018ந் திகதிய கடிதம் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (கடிதப்பிரதி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது) அத்துடன் TG/PS/EST/cadre/2018 இலக்க 14.01.2019ந் தித்திகளில் கடிதத்தில் புதிய ஆளணி உருவாக்கம் கேட்டு அனுப்பப்பட்டது. இதற்கமைவாக் பிரதிப் பிரதம செயலாளர் அவர்களால் ஆளணி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. |
| (இ) | சுகாதார மேற்பார்வையாளர் பதவி வெற்றிடமாக இருந்தும் இவற்றை நிரப்புவதற்கு உரிய நடவடிகை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆளணியை நிரப்புவதற்கு மேலதிக நடவடிகை மேற்கொள்ளப்படல் வேண்டும். | சுகாதார மேற்பார்வையாளர் வெற்றிடம் நிரப்புவதற்கு எமது TG/PS/EST/New Cadre/2017, 30.05.2018ந் திகதிய கடிதம் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (கடிதப்பிரதி இத்துடன் |

| | | |
|---|---|---|
| | | இணைக்கப்பட்டுள்ளது) அத்துடன் TG/PS/EST/cadre/2018 இலக்க 14.01.2019ந் திததிகளில் கடிதத்தில் புதிய ஆளணி உருவாக்கம் கேட்டு அனுப்பப்பட்டது. இதற்கமைவாக் பிரதிப் பிரத செயலாளர் அவர்களால் ஆளணி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. |

3.4 செத்து முகாமைத்துவம்

3.4.1 சொத்துக்களைப் பதிதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஏனைய நிறுவனங்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட 08 வாகனங்கள் 12 வருடங்களுக்கு மேற்ப்பட்ட காலமாக சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதும் அவற்றை சபையின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இவ்விடயம் தொடர்பாக உரிய அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு மேலதிக நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | எமது சபைக்கு ஏனைய நிறுவனங்களிடமிருந்து நன்கொடையாக கிடைக்கப்பெற்ற 18 வாகனங்கள் எமது சொத்துப் பதிவேட்டில் பதிவு செய்யப் பட்டுள்ளது. இவற்றுள் 10 வாகனங்களிற்கான பதிவுப் புத்தகங்கள் எமது சபையின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது. ஏனைய 8 வாகனங்களிற்கு பெயர் மாற்றம் செய்வதற்காக எமது TC/TGPS/WD/V.Co ஆம் இலக்க 03.08.2017ம் திகதிய கடிதம் மூலம் இவ்வாகனங்களிற்கான பதிவுப் புத்தகத்தினை எமது பெயருக்கு மாற்றம் செய்து தருமாறு கோரப்பட்டதற்கு இணங்க பிரதம செயலாளரின் EP/01/1/VH/005 ம் இலக்க 14.08.2017ம் திகதிய மற்றும் EP/01/1/VH/005 ம் இலக்க 07.06.2017ம் திகதிய கடிதங்கள் மூலம் கிழக்கு மாகாண சபையின் நிர்வாகத்திற்குட்பட்ட அலுவலகங்களினால் பயன்படுத்தப்படும் சகல வாகனங்களினதும் பதிவுப் பெயரானது பிரதம செயலாளர் கிழக்கு மாகாணம் என்னும் பெயரிலேயே காணப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டதால் சபையின் |

பெயருக்கு மாற்றம் செய்யப்படாமல் உள்ளது என்பதனை தயவுடன் அறியத்தருகின்றேன்.

### 3.4.2 பயன்படுத்தப்படாமலுள்ள சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | புறநெகும திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் 2014 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட 16 கடைகளைக் கொண்ட கடைத்தொகுதியில் 03 கடைகள் 2014 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை வாடகைக்கு வழங்கி வருமானம் உழைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடைத் தொகுதிகளை முழுமையாக பயன்படுத்துவதற்கு சபையின் ஊடாக நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | 16 கடைகளில் கேள்வி அறிவித்தல் கோரப்பட்டிருந்த போதிலும் தற்போது 11 கடைகள் வாடகைக்கு விடப்பட்டுள்ளது ஏனைய 03கடைகளை யாரும் கோரி எடுக்காத காரணத்தினால் இக்கடைகள் பயன்படுத்தப்படாமல் உள்ளது. எனவே இனிவரும் காலங்களில் அனைத்து கடைகளும் பாவனைக்காக பயன்படுத்தப்படும் என்பதனை தங்களுக்கு அறியத்ருகின்றேன். |
| (ஆ) | சபை நிதியின் கீழ் சாம்பல் தீவு கலாச்சார மண்டபம் ரூபா 900,305 தொகையில் 2015 ஆகஸ்ட் 31 ஆம் திகதி திருத்தம் செய்யப்பட்டிருந்த போதிலும் இக்கட்டிடத்தை பயன்படுத்துவதற்கான நீர் மற்றும் மின்சார வசதிகள் செய்யப்படாமையால் கணக்காய்வுத் திகதியான 2019 மே 21 ஆம் திகதி வரை இக்கட்டடம் குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்படுகின்றது. | தங்களது மேலதிக நடவடிக்கையினை எமக்கு அறியத்தரவும். | சபை நிதியின் கீழ் கட்டப்பட்ட சாம்பல் தீவு கலாச்சார மண்டபம் வெளிநபர்களால் வாடகைக்கு கோரப்படாததாலும் சாம்பல் தீவு நூலகத்தின் கூரை உடைந்துள்ளதால் மழை காலங்களில் ஓழுக்குகள் காணப்படுவகால் கலாச்சார மண்டபத்தை சாம்பல் தீவு நூலகமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. இன்னும் ஒரு மாத காலத்தினுள் கலாச்சார மண்டபம் சாம்பல் தீவு நூலகமாக பாவிக்கப்படும் என்பதனை தங்களுக்கு அறியத்ருகின்றேன். |

### 3.5 பெறுகைகள்

3.5.1 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) பல்நோக்கு மண்டபம் நிர்மாணம்.<br><br>சபை நிதி ஒதுக்கீட்டின் பலநோக்கு மண்டப நிர்மாண ஒப்பந்தம் ரூபா 5,464,591 தொகைக்கு ஒரு ஒப்பந்தகாரருக்கு 2017 யூன் 14 ஆம் திகதி ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.<br><br>(i) ஒப்பந்தத் தொகையான ரூபா 5,464,591 தொகைக்கும் சபையின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 6,647,822 தொகைக்கும் இடையில் 17.79% வித்தியாசம் காணப்பட்டமையினால் செயலாற்றல் முறி பெறப்படும் போது ஒப்பந்தத் தொகையில் 10% ஆன ரூபா 546,459 தொகை அறவிடப்பட வேண்டுமென தொழில்நுட்பக் குழுவினால் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் சபையானது ரூபா 273,230 தொகை மாத்திரமே அறவிட்டிருந்தது. தொழில்நுட்பக் குழுவின் சிபாரிசிற்கு இணங்க மேலும் மிகுதியாக அறவிட வேண்டிய (5%) ரூபா 273,230 தொகை அறவிடாமையால் சபைக்கு அத்தொகை இழப்பு ஏற்பட்டுள்ளது. | ஒப்பந்தங்கள் வழங்கப்படும் போது தவறுகள் ஏற்படாத வகையில் ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு அறவீடுகள் துள்ளியமான முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும் சபைக்கு இழப்புக்கள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் அது தொடர்பாக ஆராய்ந்து இழப்புக்களுக்கு பொறுப்பான நபரிடமிருந்து அறவீடு செய்யப்பட வேண்டும்.<br><br>ஒப்பந்தத்தின் பிரகாரம் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் மேற்படி வேலைக்குரிய செயலாற்றல் முறியாக ஒப்பந்த தொகையின் 10% பெறப்படவேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. ஆயினும் ஒப்பந்த ஆவணங்களின் பிரகாரம் 5% செயலாற்றல் முறி பெறப்படவேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தமையினால் தவறுதலாக ஒப்பந்த தொகையின் 5% செயலாற்றல் முறியாக பெறப்பட்டிருந்தது. இதனை சீராக்குவதற்காக தற்போது வழங்கப்படவுள்ள கொடுப்பனவு சிட்டையில் இருந்து மேலதிகமாக 5% செயலாற்றல் முறியினை அறவீடு செய்து சபையின் கணக்கில் வைப்பில் இடுவதற்கு நடவடிக்கை எடுக்கும் முகமாக ஏற்கனவே ஒப்பந்தகாரரருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் ஒப்பந்தம் இடைநிறுத்தல் தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தமையினால் கொடுக்கப்படவிருந்த பகுதிக் கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டு முற்றாக வைப்பில் இடப்படுட்டுள்ளது. எனவே கொடுப்பனவில் இருந்து கழிப்பதற்கு தீர்மானிக்கப்படுட்டிருந்த மீதமுள்ள 5% Performance bond இனை வைப்பில் இடாமல் மீதிபகுதிக்கொடுப்பனவு முற்றாக வைப்பில் இடப்பட்டுள்ளது. ஏன்பதை அறியத்தருகின்றேன். எனவே சபைக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன். |

(ii) இவ்வேலை ஒப்பந்தத்தின் பிரகாரம் 2017 நவம்பர் 28 ஆந் திகதி ஒப்பந்தக்காரரால் நிறைவு செய்யப்பட்டு சபையிடம் கையளிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2019 மே 21 ஆம் திகதி வரை மாபிள் பதித்தல், குளியலறை வேலைகள், நீர் இணைப்புப் பெறல் போன்ற ரூபா 3,018,276 பெறுமதியான 55% வேலைகள் நிறைவுறுத்தப்படாமல் இருந்த போதிலும் இது தொடர்பாக சபை மேலதிக நடவடிக்கையினை எடுத்திருக்கவில்லை.

மேற்படி வேலையானது உரிய காலத்தினுள் முடிவுறுத்தப்படாமையினால் சபை அனுமதிக்கு அமைவாக ஒப்பந்தகாரரை இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு தொடர்நடவடிக்கைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

17.05.2019ஆம் திகதி காலை 10.30 மணியளவில் உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் இவ்வேலை தொடர்பாக கலந்துரையாடும் போது ஒப்பந்தகாரர் இவ்வேலையை ஒரு கிழமைக்குள் ஆரம்பிபதாகவும் தொடர்ந்து ஒரு மாதகாலத்திற்குள் நிறைவுறுத்தி தருவதாக ஒப்புக்கொண்டார். இதற்கமைய இவ் ஒப்பந்தகாரரரையே வைத்து இவ்வேலையை முடிவுறுத்துவதெனவும் அனைவரும் ஏற்றுக்கொண்டு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) உள்ளக விளையாட்டு மைதானம் நிர்மாணித்தல்

----------------------------------------------

மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதி ஒதுக்கீட்டின் கீழ் உள்ளக விளையாட்டு மைதானம் நிர்மாணம் செய்வதற்கான ஒப்பந்தம் ரூபா 3,862,000 தொகைக்கு 2017 நவம்பர் 06 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்தது. அது தொடர்பான பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

ஒப்பந்தங்கள் வழங்கப்படும் போது இவ்விடயங்கள் திருப்தி கரமாக ஆராயப்பட்டு ஒப்பந்தம் வழங்கப்படுவதுடன் திட்டமிட்டதன் படி கட்டங்களை நிர்மானித்து உரிய காலப்பகுதிக்குள் பயன்படுத்தும் வகையில் வேலைகளை நிறைவுறுத்துதல் வேண்டும். இதனால் மேற்கொள்ளப்படும் செலவினத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பலனை அடைய முடியும்.

ஐயவினாக்குரிய அ, ஆ விற்கான விளக்கமானது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவுடனான கலந்தாலோசனைக்கமைவாக பின்வருமாறு வழங்கப்படுகின்றது. மேற்குறிப்பிடப்பட்ட வேலைக்குரிய பிரதேச சபையின் மதிப்பீட்டு தொகையானது ரூபா 3,998,458.50 ஆகும். இதில் தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரின் ஒப்பந்த தொகை ரூபா 3,862,000.00 ஆகும். இத்தொகையானது தொழில்நுட்ப அறிக்கையின் பிரகாரம் பொறியியலாளரின் மதிப்பீட்டினை விட 3.41% குறைவாகவே உள்ளது. ஆயினும் கீழ்குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கு (Item No 19, 20, 21, 28) பொறியியலாளரின் மதிப்பீட்டில் உள்ள விலை வீதங்களைவிட ஒப்பந்தகாரரின் தொகை குறைவாகவும், Item No 04, 13, 24 வேலைகள் தொடர்பாக பொறியியலாளரின் மதிப்பீட்டில் உள்ள விலை வீதங்களைவிட ஒப்பந்தகாரரின்

| | | |
|---|---|---|
| | | தொகை கூடுதலாகவும் விலையிடப்பட்டிருந்தது. ஆயினும் இவ்விலை வீதங்கள் தொடர்பாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவானது இக்குறிப்பிடப்பட்ட விலை வீதங்களிற்கிடையிலான வித்தியாசம் தொடர்பில் திருப்தி அடைந்துள்ளது. |
| (i) | மதிப்பீட்டின் பிரகாரம் வேலைகளை செய்து முடிக்காமல் கட்டடத்தில் மாற்றங்களை ஏற்படுத்திமையால் ரூபா 517,482 பெறுமதியான சில வேலைகள் மதிப்பீட்டை விட அதிகமாக செய்ய வேண்டி ஏற்பட்டது. இவ் வேலைகளுக்கான ESR அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. மேலும் திட்டமிட்டபடி கட்டடத்தினை நிர்மாணிக்காமல் மாற்றங்களை ஏற்படுத்தியமையினால் இக்கட்டடம் பயன்படுத்தக்கூடிய அளவிற்கு முழுமைப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | இவ்விலை வீதங்களில் ஒப்பீட்டளவில் Item No 24 தவிர்ந்த ஏனையவற்றில் பாரிய விலை வேறுபாடுகள் காணப்படவில்லை. 2017ஆம் ஆண்டு செய்யப்பட்ட இம் மதிப்பீடு Item No 24 இல் ரூபா 57 ஆக விலை இடப்பட்டுள்ளது. ஆயினும் 2017அம் ஆண்டின் உள்ளூராட்சி ஆணையாளரினால் அனுமதிக்கப்பட்ட விலைக்கூற்றில் ரூபா114 ஆக குறிக்கப்பட்டுள்ளது. எனவே ஒப்பந்தகாரரினால் குறிப்பிடப்பட்ட விலை ரூபா 125.00ஆனது உள்ளூராட்சி ஆணையாளரினால் அனுமதிக்கப்பட்ட விலைக்கூற்றுடன் ஒப்பிடும் போது திருப்தி அளித்தமையினால் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. உள்ளூராட்சி திணைக்கள விலை ஆய்வு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளத. |
| (ii) | ரூபா 427,775 பெறுமதியான வேலைகள் கணக்காய்வுத் திகதியான 2019 மே 21 ஆம் திகதி வரை முற்றாக செய்யப்பட்டிருக்கவில்லை. | மேல் குறிப்பிடப்பட்டவற்றை ஈடுகட்டுவதற்காகவே 427,775ரூபா பெறுமதியான தற்போதைக்கு அத்தியாவசியமற்ற வேலைகள் நீக்கப்பட்டன. ஏவ்வாறாயினும் கட்டம் 2 நிர்மானப்பணிகளுடன் இந்நிர்மானப் பணிகள் முழுமையாகப் பூர்த்தி செய்யமுடியும் என்பதுடன் அதற்கான மதிப்பீட்ட அறிக்கையும் மாகாணப்பணிப்பாளர், விளையாட்டுத் திணைக்களம், கிழக்கு மாகாணம். கோரியதற்கு இணங்க அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |